**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28- ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

<u>O.S. NO. 926/2022</u>

**வா.சா.1**

**திரு. வெங்கடேஷ்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை ( பிரதிவாதி தரப்பில்)**

பிரதிவாதி எவ்வளவு கடன் தொகை கொடுக்கப்பட்டது என்றால் 2 கடன்களுக்கு 12,09,276/- நிலுவையில் உள்ளது. கடன் எவ்வளவு கொடுக்கப்பட்டது என்றால் ஆவணத்தை பார்த்தால் தான் சொல்ல இயலும். கடன் பெறும் சமயத்தில் பிரதிவாதியிடம் கையெழுத்து பெற்ற ஆவணங்களில் அவருக்கு படித்து காண்பிக்கப்பட்டதா என்றால் நான் அப்போது இந்த கிளையில் பணியில் இல்லை என்பதால் தெரியாது. பிரதிவாதி க்கு எத்தனை சதவீதம் வட்டி கணக்கிடப்பட்டுள்ளது என்றால் கடன் ஆவணங்களில் வட்டி குறிப்பிட்டு தான் கடன் வழங்கப்படும். அதிகமான வட்டி குறிப்பிட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வட்டிக்கு வட்டி கணக்கிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் குறிப்பிட்ட காலவரையறைக்குள் வட்டி தொகை செலுத்தாமல் இருந்தால் மேற்படி கடன் NPA ஆக மாற்றபடும் அவ்வாறு மாற்றப்பட்ட பின்னிட்டு கூட்டு வட்டி கணக்கிடப்படும். கடன் வழங்கும் சமயத்தில் மேற்படி

கூட்டு வட்டி கணக்கிடப்படும் என்ற விபரத்தை பிரதிவாதிக்கு தெரிவிக்கப்படும் என்றும், அவரிடமிருந்து அதிகமான வட்டி பெறவேண்டும் என்ற எண்ணத்தில் கூட்டுவட்டி கணக்கிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி பெண் என்பதால் பெண் தொழில் முனைவோருக்கு அதிகமான கடன் சலுகைகள் உள்ளது என்று கூறி அதன் அடிப்படையில் தான் அவர் கடன் பெற்றார் என்றால் மேற்படி சலுகைகள் தற்போதுதான் அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதிக்கு கடன் வழங்கிய சமயத்தில் அந்த சலுகைகள் இல்லை. பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததாக கூறும் சமயம் கொரோனா காலம் என்றால் சரிதான். கொரோனா காலகட்டத்தில் பிரதிவாதிக்கு நாங்களாகவே முன்வந்து சலுகைகள் இருப்பதாக கூறி கடன் கொடுத்துவிட்டோம் என்றால் சரியல்ல.

**வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**